ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2178/17 - 2020 ජූනි මස 02 වැනි අඟහරුවාදා - 2020.06.02
*2178/17 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை) கோட்டாபய ராஜபக்ஷ

### சனாதிபதியின் பணிப்புரை

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் வண்ணம் கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணியொன்றை நிறுவுதல்.*

1. தொல்பொருள் சக்கரவர்த்தி வணக்கத்துக்குரிய எல்லாவல மேதானந்த நாயக்க தேரர் அவர்கள்
2. வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களின் மற்றும் தமன்கடுவ பிரதேசத்தின் பிரதம சங்கநாயக்க அரிசிமலே ஆரணியத்தின் சேனாசனாதிபதி வணக்கத்துக்குரிய பனாமுரே திலகவங்ச நாயக்க தேரர் அவர்கள்
3. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன அவர்கள்
   செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
4. கலாநிதி செனரத் பண்டார திசாநாயக்க அவர்கள்
   தொல்பொருள் பணிப்பாளர் நாயகம்
5. திருமதி சந்திரா ஹேரத்
   காணிப் பணிப்பாளர் நாயகம்
6. திருமதி ஏ. எல். எஸ். சி. பெரேரா
   நில அளவையாளர் நாயகம், நிலஅளவையாளர் திணைக்களம்

7. பேராசிரியர் ராஜ் குமார் சோமதேவ அவர்கள்
சிரேட்ட விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம்

8. பேராசிரியர் கபில குணவர்த்தன அவர்கள்
பேராதனை பல்கலைக்கழகம் வைத்திய பீடம்

9. தேசபந்து தென்னக்கோன் அவர்கள்
சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிழக்கு மாகாணம்

10. திரு.எச்.ஈ.எம்.டப்ளிவ்.ஜி.திசாநாயக்க
மாகாண காணி ஆணையாளர், கிழக்கு மாகாணம்

11. திரு.திலித் ஜயவீர
தலைவர், தெரண ஊடக வலையமைப்பு

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையின் மரபுரிமைகளைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு உரித்தாக்கிக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதைக் கவனத்தில்கொண்டும்,

இலங்கைத்தீவு அதிசிறந்த பெருமைகொண்ட சரித்திரமொன்றுக்கு உரிமை கூறுவதோடு, நாடொன்றின் தொல்பொருள் மரபுரிமைகள் சொல்லப்பட்ட நாட்டின் தனித்துவத்தைக் கட்டியெழுப்புவதைப்போன்று அதன் வரலாறுமிக்க பரவலை எதிரொலிக்கும் மூலங்களாகும் என்பதை, கவனத்தில்கொண்டும்,

இம்மரபுரிமைகள் காலத்தோடு இயற்கையினதும், மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் செயற்பாடுகளினாலும் அழிவுக்குள்ளாகும் ஆபத்தான நிலைமை படிப்படியாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதைக் கவனத்தில்கொண்டும்,

இலங்கை தேசிய ரீதியில்போன்று சர்வதேச ரீதியிலும் இவ்வாறான உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பல்வேறு உடன்படிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளது என்பதைக் கவனத்தில்கொண்டும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதிப் பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த நம்பிக்கை வைத்து மேற்குறிப்பிட்ட தங்களை அதாவது,

1. தொல்பொருள் சக்கரவர்த்தி வணக்கத்துக்குரிய எல்லாவல மேதானந்த நாயக்க தேரர் அவர்கள்

2. வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களின் மற்றும் தமன்கடுவ பிரதேசத்தின் பிரதம சங்கநாயக்க அரிசிமலே ஆரணியத்தின் சேனாசனாதிபதி வணக்கத்துக்குரிய பனாமுரே திலகவங்ச நாயக்க தேரர் அவர்கள்

3. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன அவர்கள்
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு

4. கலாநிதி செனரத் பண்டார திசாநாயக்க அவர்கள்
தொல்பொருள் பணிப்பாளர் நாயகம்

5. திருமதி சந்திரா ஹேரத்
காணிப் பணிப்பாளர் நாயகம்

6. திருமதி ஏ. எல். எஸ். சி. பெரேரா
நில அளவையாளர் நாயகம், நிலஅளவையாளர் திணைக்களம்

7. பேராசிரியர் ராஜ் குமார் சோமதேவ அவர்கள்
சிரேட்ட விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம்

8. பேராசிரியர் கபில குணவர்த்தன அவர்கள்
பேராதனை பல்கலைக்கழகம் வைத்திய பீடம்

9. தேசபந்து தென்னக்கோன் அவர்கள்
சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிழக்கு மாகாணம்

10. திரு.எச்.ஈ.எம்.டப்ளிவ்.ஜி.திசாநாயக்க
மாகாண காணி ஆணையாளர், கிழக்கு மாகாணம்

11. திரு.திலித் ஜயவீர
தலைவர், தெரண ஊடக வலையமைப்பு

*கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக இத்தால் நியமிக்கின்றேன்.*

1. *கிழக்கு மாகாணத்தினுள் அமைந்துள்ள தொல்பொருள் ரீதியிலான பெறுமதி வாய்ந்த இடங்களை அடையாளம் காணுதல்.*
2. *அவ்வாறு அடையாளம் காணப்பட்ட இடங்கள் மற்றும் தொல்பொருள் பாதுகாப்பு மற்றும் மீள்நிர்மாணித்தல், அத்தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்காகப் பொருத்தமான நடைமுறையொன்றை இனங்காணுதல் மற்றும் செயற்படுத்துதல்.*
3. *அத்தொல்பொருள் இடங்களுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளின் அளவை அடையாளம் காணுதல், குறித்துரைக்கப்பட்ட மற்றும் சட்டரீதியாக அவ்விடங்களை ஒதுக்குவதற்குத் தேவையான செயற்பாடுகளை எடுத்தல்.*
4. *அத்தொல்பொருள்ரீதியான பெறுமதிவாய்ந்த இடங்களின் கலாசாரப் பெறுமதிகளைப் பாதுகாத்து இலங்கையின் தனித்துவத்தை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பிரசாரம் செய்தலும் சொல்லப்பட்ட மரபுரிமைகளை மேம்படுத்துவதற்காகச் சிபார்சுகளைச் சமர்ப்பித்தலும்*

*மேலும், **பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன அவர்களை செயலணியின் தலைவராகவும்**,*

***சனாதிபதியின் சிரேட்ட உதவிச் செயலாளர் திருமதி ஜீவந்தி சேனாநாயக்க அவர்களை மேற்போந்த செயலணியின் செயலாளராகவும்**, நியமிக்கின்றேன்.*

*மேலும், இத்தால் கையளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உரியதாகத் தேவைப்படக்கூடிய விடயங்களை தேடிப்பார்ப்பதற்கு மற்றும் ஆலோசனை வழங்குவதற்கு கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.*

*மேலும், கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களுக்கான உங்களுக்கு காலத்துக்குக்காலம் எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.*

*மேலும், கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணியினால் ஆலோசனைகள் வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக ஒத்துழைப்பினைக் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களினால் அப்பணி தொடர்பாக உரியவாறு பின்பற்றக்கூடிய அத்தகைய ஆலோசனைகளுக்கமையச் செயற்பட வேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் சகல தகவல்களையும் வழங்க வேண்டுமெனவும் நான் இத்தால் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக் கின்றேன்.*

*மேலும், யாதேனும் அரச ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரச கூட்டுத்தாபன மொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்ற தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்ட செயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.*

*இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

***பீ. பி. ஜயசுந்தர**,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*